செய்தி வெளியீடு எண்.108 நாள்.31.08.2021

## அரசினர் தொழிற் பயிற்சி நிலையம் (மகளிர்) அம்பத்தூர்

## 15.09.2021 வரை நேரடி சேர்க்கை

அரசினர் தொழிற் பயிற்சி நிலையம் (மகளிர்) அம்பத்தூர் சென்னை –600 098–ல் 15.09.2021 வரை (www.skilltraining.tn.gov.in) என்ற இணையதள வாயிலாக நேரடி சேர்க்கை நடைபெற்றுவருகிறது. 8ஆம் வகுப்பு , பத்தாம் வகுப்பு தேர்ச்சி மற்றும் +2 தேர்ச்சி , தேர்ச்சி பெறாதவர்கள் விண்ணப்பிக்கலாம். வயது வரம்பு இல்லை. பயிற்சி அளிக்கப்படும் தொழிற்பிரிவுகள் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

பயிற்சியில் சேருவோருக்கு மாத உதவித்தொகை ரூ.750, இலவச பஸ் பாஸ், சைக்கிள் மடிக்கணினி, பாடப்புத்தகங்கள் வரைபடக்கருவிகள், இரு செட் சீருடை, மூடுகாலணி மற்றும் சிறந்த தொழில் நிறுவனங்களில் வேலை போன்றவை வழங்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது..

விண்ணப்பதாரர்கள் 10–ம் வகுப்பு கல்வி சான்றிதழ் , மாற்று சான்றிதழ், சாதி சான்றிதழ் ஆதார் அட்டை, பாஸ்போர்டு அளவு புகைப்படம் 5 எண் ஆகியவற்றை எடுத்து வர வேண்டும்.

| வ.எண் | தொழிற் பிரிவுகள் | பயிற்சி காலம் | கல்வித் தகுதி |
|---|---|---|---|
| 1. | கம்மியர் கருவிகள் | 2 வருடம் | 10ம் வகுப்பு தேர்ச்சி |
| 2. | கோபா | 1 வருடம் | 10ம் வகுப்பு தேர்ச்சி |
| 3. | செயலகப் பயிற்சி | 1 வருடம் | 10ம் வகுப்பு தேர்ச்சி |
| 4. | கட்டிடப்பட வரைவாளர் | 2 வருடம் | 10ம் வகுப்பு தேர்ச்சி |
| 5. | தையல் தொழில் நுட்பம் | 1 வருடம் | 8ம் வகுப்பு தேர்ச்சி |

**இத்தகவலை சென்னை மாவட்ட ஆட்சியர் முனைவர் ஜெ.விஜயாராணி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

**வெளியீடு**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,**
**சென்னை–01**